1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: ஏற்கெனவே பரிசீலனையில் இருந்த திட்டம்தான் இது. அந்தப் பாதை அகலப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த வழித் தடத்தில் பேருந்தினைவிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதை சரியில்லை என்கிற தகவலைத் தான் தந்திருக்கிறார்கள். பாதை சரியாக இருக்குமானால் மறுபரிசீலனை செய்யப்படும்.

பிராட்வே-முக்காரம்பாக்கம் பேருந்து வழித்தடம்

*180 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 137 (பிராட்வே-முக்காரம்பாக்கம்) பேருந்து 1—10—1973 முதல் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அவ்வழித்தடத்தில் மீண்டும் பேருந்துப் பணியினைத் தொடர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: அந்தப் பேருந்து சில நாட்களாக நின்றுவிட்டது என்று சொல்கிறார்கள். காரணம் அது பழைய பேருந்து. புதிய பேருந்தினைவிட ஆலோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து இப்போது சரியாகப்போய் வருகிறதென்றுதான் சொல்கிறார்கள். பழைய பேருந்தா, புதிய பேருந்தா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை.

குழந்தைகள் அருங்காட்சியகம்

*151 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவர்களின் கலைத்திறமையை வளர்த்திட தனி மியூசியம் நிறுவிட அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?